1975 மார்ச் 7]

சில தவறுகள் நடைபெற்றுவருவதாகப் புகார்கள் வருகின்றன. இங்கே எழுந்துள்ள கேள்விகளின் அடிப்படையிலே, தக்க நடவடிக்கை எடுக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை இருக்கின்றன? அதில் எத்தனை தவறு செய்திருக்கின்றன? அப்படி தவறுசெய்து இயங்காமல் இருப்பவை எத்தனை? அப்படி மீனவர் சங்கங்கள் இல்லாத சில இடங்களில், சில ஏரிகளிலே, கடைசி நேரத்தில் தண்ணீர் வற்றிவிட்டபிறகு ஏராளமான மீன்கள் இருப்பதாகவும், அந்த கிராமத்திலே இருக்கின்ற இரண்டு மூன்று செல்வாக்கு உள்ளவர்கள், அந்த மீன்களைப் பிடித்து அதை விற்றுவருகின்ற பணத்தை அனுபவிக்கிறார்கள் என்ற பழிச்சொல் இருக்கின்றதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மீனவர் சங்கங்கள் தமிழ்நாட்டில் பல இருக்கின்றன. தவறு செய்கின்றவைகள் எத்தனை என்று கேட்டால், சில தவறு செய்கின்றன. சில காய்ந்துபோன குட்டைகளில் மீன்கள் மீன்களாக இருப்பதில்லை. கருவாடுகளாக ஆகிவிடுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Doctors in Animal Husbandry Department

*128. Q. THIRU P. R. THOMAS (on behalf of THIRU K. S. GANAPATHI) : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(a) whether it is a fact that some Doctors in Animal Husbandry Department of the State Government are deputed to undergo the Post-Graduate Course training in Sheep Husbandry in Australia and the International Course in Sheep Husbandry in Australia and New Zealand ; and

(b) if so, the number of persons so deputed during the yeare 1972-73 and 1973-74 ?

கால் நடை வளர்ப்புத் துறை மருத்துவர்கள்

திரு.பி. ஆர்.தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆஸ்திரேலியாவில் செம்மறியாடு வளர்ப்பு குறித்து பட்டமேற் படிப்பிலும் ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளில் செம்மறியாடு வளர்ப்பு குறித்த அனைத்து நாடுகள் படிப்பிலும் பயிற்சி பெறுவதற்காக மாநில அரசின் கால்நடை வளர்ப்புத் துறை மருத்துவர்கள் சிலர் மூகமையில் அனுப்பப்படுகின்றனரா?

(இ) ஆமெனில், 1972–73, 1973–74 ஆண்டுகளில் அவ்வாறு எத்தனை மருத்துவர்கள் முகமையில் அனுப்பப்பட்டனர்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) கால் நடை மருத்துவப்பணியில் (இதில் செம்மறியாடுகள் வளர்ப்பும் அடங்கும்) பயிற்சி பெறுவதற்காக கால்நடை வளர்ப்புத்துறையிலிருந்து 1972–73-ல் ஓர் அதிகாரி ஆஸ்திரேலியாவிற்கு முகமையில் அனுப்பப்பட்டார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சில சமயங்களிலே, உறுப்பினர்கள் வராதபோது, மற்ற உறுப்பினர்கள் அந்தக் கேள்விக்கு பதில் கேட்கிறார்கள். அநேகமாக "ஆம்", "இல்லை" என்ற அளவிலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள். அமைச்சர் அவர்களுக்குத் தக்க பதில்கள் வந்திருக்கின்றதால், அந்த உறுப்பினர் இல்லாவிட்டாலும், முழு பதிலையும் அவர்கள் படித்தால் இருப்பவர்களுக்கு அது பயன் படுவதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வரமுடியாத உறுப்பினர்கள், இருக்கின்ற உறுப்பினர்களிடத்திலே இன்னின்ன உப கேள்விகள் கேளுங்கள் என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்களானால், போதுமானது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பேசுகின்றவர்கள், பேசப் போகிறேன் என்று சொல்லி பெயர் கொடுத்துவிட்டு, வெளியே போய் விடுகின்றார்கள். அதற்கு என்ன பண்ணுவது?

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, செம்மறியாடு வளர்ப்பு பற்றி பயிற்சி பெறுவதற்காக ஆஸ்திரேலியா நாட்டிற்கு கால்நடை மருத்துவர்கள் அனுப்பப்பட்டதாகக் கேள்வி. இதைப் போன்று சில நிறுவனங்கள், அந்தத் துறையைச் சேர்ந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மேற் பயிற்சிக்காக அனுப்புகின்றன. அப்படியே பால் பண்ணையைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி அனுப்பப்பட்டார். ஆனால் அவரை அதே துறையில் வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை அனுப்பாமல், அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்களை அனுப்புகின்ற ஒரு புதிய முறையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தற்போது இந்தக் கேள்விக்கு இடமில்லை. செயலாளர் பதவியில் இருந்த ஒருவர்தான் அனுப்பப்பட்டார். அவர் ஐ. ஏ. எஸ். அதிகாரி. பாக்கி அனைவருமே இந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள்தான். அவர்கள்தான் இப்போது இருக்கின்றார்கள். அவர்கள்தான் அனுப்பப்பட வேண்டுமென்ற முறை இப்போது இருக்கிறது. அவர்கள்தான் அனுப்பப்படுகின்றார்கள்.

Temple properties

* 129. Q. THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased o state—